


# டெனோபோவீர் (விரீட்)

## எனக்கு ஏன் டெனோபோவீர் மருந்து கொடுக்கப்படுகிறது?

- டெனோபோவீர் (விரீட் என்றும் அழைக்கப்படுகிறது) எனும் மருந்து மற்ற மருந்துகளுடன் இணைந்து ஹெச்ஐவி ( ஹ்யூமன் இம்யுனோ டிபிஷியன்சி வைரஸ்) நோயின் சிகிச்சையில் பயன்படுத்தப்படுகிறது.
- “ரிவர்ஸ் ட்ரான்ஸ்கிரிப்டெஸ்” எனறும் புரோடீனை டெனோபோவீர் தடுக்கிறது. இதனால், இது ரிவர்ஸ் ட்ரான்ஸ்கிரிப்டெஸ் இன்ஹிபிட்டர்ஸ் (ஆர்டிஐக்கள்) எனும் மருந்துகள் பிரிவை சேர்ந்தது. ஹெச்ஐவி கிருமி பெருக, அதற்கு இந்த புரோட்டீன் தேவைப்படுகிறது. அதனால் இந்த மருந்து அதை தடுப்பதன் மூலம் ஹெச்ஐவி நோயை தாமதப்படுத்த உதவுகிறது.
- 
- இந்த மருந்தை உட்கொள்ளுவதால், உங்கள் உடலில் உள்ள கிருமியின் அளவை குறைக்கலாம். நீங்கள் எய்ட்ஸ் சம்பந்தப்பட்ட நோய்களினால் நோய்வாய்ப்படுவதற்கான வாய்ப்புகள் குறையலாம், உடல் அதிக நாள் ஆரோக்கியமாக இருக்க உதவுகிறது அல்லது உடல் ஆரோக்கியத்தை மீண்டும் பெறலாம். உங்கள் நோய் எதிர்ப்பு சக்திக்கு ஏற்படும் சேதத்தையும் குறைக்கலாம்.

## இந்த மருந்தை நான் எப்படி எடுத்துக் கொள்ள வெண்டும்?

- விரீட் மற்ற மருந்துகளுடன் சேர்ந்து செயல்படலாம். நீங்கள் எடுத்துக்கொள்ளும் டாக்டர் கொடுத்த மருந்துகள் மற்றும் வேறு மருந்துகள் (மூலிகைகள் மற்றும் வைட்டமின்கள் உட்பட) பற்றி டாக்டர் மற்றும் மருந்து கடைக்காரரிடம் கூறவும்
- விரீட் உடன் செயல்படக்கூடிய பொதுவான மருந்துகள் டிடிஐ (விடேக்ஸ் அல்லது விடெக்ஸ்-இசி), இரண்டு மருந்துகளையும் சேர்த்து எடுத்துக் கொண்டால், டிடிஐ-ன் அளவை சரிசெய்ய வேண்டியிருக்கலாம்.

## டெனோபோவீரை மது மற்றும் தெருவோர போதை மருந்துகள் உடன் எடுத்துக் கொள்ளலாமா?

- பொதுவாக, ஹெச்ஐவி மருந்துகள் எடுத்துகொள்ளும்போது அதிக அளவு மது மற்றும் தெருவோர போதை மருந்துகளை தவிர்ப்பது நல்லது. நீங்கள் எடுத்துக்கொள்ளும் சில மருந்துகளுடன் மது விளைவுகளை எற்படுத்தலாம். குடிக்க வேண்டும் என்பதால் ஒரு நேர மருந்தை தவிர்க்க வேண்டாம்.



ASAAP
ALLIANCE FOR SOUTH ASIAN AIDS PREVENTION
www.asaap.ca

CATIE
Canadian AIDS Treatment Information Exchange
Réseau canadien d'info-traitements sida
www.catie.ca

## நான் கர்பமாக இருந்தாலோ, தாய்பால் ஊட்டி வந்தாலோ டெனோபோவீர்யை எடுத்துக் கொள்ளலாமா?

- கர்ப்பமாக இருக்கும்போது, தாய்பால் ஊட்டும்போது மற்றும் குழந்தைகளுக்கும் டெனோபோவீர் பயன்படுத்துவது பாதுகாப்பானதுதானா என்பது இதுவரை தெரியவில்லை, அதனால் மருந்து எடுத்துக் கொள்வது பற்றி டாக்டரிடம் பேசவும்.
- தாய்பால் முலமாக ஹெச்ஐவி கிருமி பரவும் என்பதால், ஹெச்ஐவி உள்ள பெண்கள் தாய்பால் கொடுப்பதை தவிர்க்கலாம் என்று பரிந்துறைக்கப்படுகிறது.

## டெனோபோவீர் எடுத்துகொள்ளும் போது வேறு என்னென்ன முன் எச்சரிக்கைகள் பற்றி நான் தெரிந்து கொள்ள வெண்டும்?

- டெனோபோவீர் சிறுநீரகத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தலாம் என்பதால் சிறுநீரக செயல்பாட்டு சோதனைகள், இரத்த பரிசோதனைகள் ஆகியவற்றை டாக்டரிடம் சென்று முறையாக செய்து கொள்ளவும்.
- தொடர்ச்சியாக மருந்துகள் இருக்கிறதா என உறுதிபடுத்திக் கொள்ளுங்கள்.

டெனோபோவீர் கிருமிகளை அழிப்பதில்லை, எய்ட்ஸ்-ஐ குணப்படுத்துவதில்லை. ஹெச்ஐவி பறவுவதை தடுப்பதும் இல்லை, அதனால் முன்எச்சரிக்கை எற்பாடுகளை செய்து கொள்ளவும், உடலுறவு கொள்ளும் போது (லேடெக்ஸ் காண்டோம்களை பயன்படுத்தவும்) அல்லது போதை மருந்து பயன்படுத்தும்போது (சுத்தமான ஊசிகளை பயன்படுத்தவும்).

ஹெச்ஐவி சம்பந்தப்பட்ட நோய்கள் மற்றும் சம்பந்தப்பட்ட சிகிச்சைகள் பற்றி முழு தகவல் தெரிந்த பயிற்சி பெற்ற மருத்துவரின் ஆலோசனையின் பேரில் மட்டுமே குறிப்பிட்ட மருத்துவ சிகிச்சைகள் பற்றி முடிவெடுக்க வேண்டும்.

தங்களை கவனித்து கொள்பவர்களுடன் சேர்ந்து, உடல் நிலையை தாமே பராமரிக்க விரும்பும் ஹெச்ஐவி/எய்ட்ஸ் நோய் உள்ளவர்களுக்கு தகவல் மற்றும் உதவியை கனடாவின் எய்ட்ஸ் சிகிச்சை தகவல் பரிமாற்றம் (CATIE) மற்றும் தெற்காசிய எய்ட்ஸ் தடுப்பு நிலையம் (ASAAP) நல்லெண்ணத்துடன் வழங்குகிறது. CATIE(கேட்டி) அல்லது ASAAP (ஏஸாப்) அளிக்கும் அல்லது பிரசுரிக்கும் தகவல்களை பெறுபவர்கள் இதை மருத்துவ ஆலோசனையாக கருதக்கூடாது. குறிப்பிட்ட சிகிச்சைகளை நாங்கள் பின்பற்றவோ, பரிந்துரைப்பதோ இல்லை, பல்வேறு விரிவான தகவல்களை கலந்தாலோசிக்கவே நாங்கள் வலியிறுத்துகிறோம். மருத்துவம் சம்பந்த்ப்பட்ட எந்த ஒரு முடிவையோ, நடவடிக்கையையோ எடுக்குமுன் பயிற்சி பெற்ற மருத்துவரை கலந்து ஆலோசிக்குமாறு வலுவாக வலியிறுத்துகிறோம்.

CATIE அல்லது ASAAP அளிக்கும் அல்லது பிரசுரிக்கும் தகவல்கள் முழுமையானவை அல்லது முற்றிலும் சரியானவை என்பதற்கு நாங்கள் எந்த உத்தரவாதமும் அளிப்பதில்லை. இந்த தகவல்களின் அடிப்படையில் செயல்படுபவர்கள் தங்கள் சொந்த பொறுப்பில் செயல்படலாம். இத்தகைய தகவல்களிலிருந்து பெறும் பயன் அல்லது அவபயன்களால் ஏற்படக்கூடிய எந்த ஒரு சேதத்திற்கும் CATIE அல்லது ASAAP அல்லது கனடாவின் பொது சுகாதார ஏஜென்சியோ, அதன் ஊழியர்களோ, இயக்குநர்களோ, அதிகாரிகளோ, அல்லது தொண்டர்களோ, பொறுப்பாக மாட்டார்கள். CATIE அல்லது ASAAP மூலமாக கிடைக்கும் அல்லது பிரசுரிக்கப்படும் கட்டுரையின் கருத்துக்கள் முற்றிலும். ஏழுத்தாளரின் கருத்துக்கள் ஆகும், இது CATIE அல்லது ASAAP யின் கொள்ளைகைகளையோ கருத்துக்ளையோ பிரதிபலிப்பதில்லை. கனடாவின் எந்த ஒரு பொது சுகாதார ஏஜென்சியின் கருத்துக்களையும் இது பிரதிபலிப்பதில்லை.

Copyright: This Fact Sheet is made available through a collaboration between Alliance for South Asian AIDS Prevention (ASAAP), Asian Community AIDS Services (ACAS) and the Canadian AIDS Treatment Information Exchange (CATIE). Original content developed by ACAS, 2001. Translation into Punjabi and Tamil by ASAAP, 2006.

This information is also available in Chinese, Tagalog and Vietnamese www.acas.org
Funding has been provided by the Public Health Agency of Canada
Supported by an unrestricted educational grant from GlaxoSmithKline in partnership with Shire BioChem